பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 2 புதன்கிழமை (16.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 170

# இஸ்ரேலிய ராடர்களை வாங்குகின்றது இந்தியா!

## வான் புலிகளினால் எழக்கூடிய அச்சுறுத்தலைச் சமாளிக்கவாம்

புதுடில்லி, மே 16

**விடுதலைப் புலிகளின் வான் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்காக தென் கரையோரங்களில் இஸ்ரேலியத் தயாரிப்பு ராடர்களைப் பயன்படுத்த இந்தியா முடிவெடுத்துள்ளது. தமிழ்நாட்டுக் கரையோரங்களில் விரைவில் அவை நிறுவப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்படுகின்றது.**

இதற்காக இஸ்ரேலிடம் இருந்து 4 புதிய 'ஏரோ ஸ்டார்' ராடர்களைக் கொள்வனவு செய்யவுள்ளது புதுடில்லி. அதற்கான கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட இரு EL/M-2083 ஏரோ ஸ்டார் ராடர்களின் சிறப்பான தொழிற்பாட்டைத் தொடர்ந்து அவற்றை மேலும் வாங்குவதற்கு இந்திய விமானப் படை முன்வந்துள்ளது.

நிலத்துடன் பிணைக்கப்பட்டபடி வானில் பறக்கும் பலூனில் இந்த ராடரின் (08ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் கைது குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 16

யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட மூன்று மாணவர்களின் விடுதலை, பல்கலைக்கழக சமூகத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் ஆகியன தொடர்பாக தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுக்கு உறுதி அளித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஜனாதிபதியுடன் நேற்றுமாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

இந்த இரு விடயங்கள் தொடர்பாகவும் கூட்டமைப்பு எழுதிய கடிதம் தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளதாக வும் -

யாழ்.மாவட்ட படைத் தளபதியுடன் இது தொடர்பாக பேசி உரிய நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும்- ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்ததாக மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு காத்திருப்பதாக சேனாதிராசா நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

அதேவேளை -

குடாநாட்டில் கல்விச் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று மாலை கூடி ஆராய்ந்துள்ளனர். மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்குப் பூரண ஆதரவு வழங்குவது என்றும் -

பல்கலைக்கழகசமூகம் மற்றும் மாணவர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து வெளிநாட்டுத் தூதர்களைச் சந்தித்து விளக்குவது என்றும் - அப்போது முடிவு செய்யப்பட்டது. (அ-1)

## கல்லூரி மாணவர்கள் கடத்தப்பட்டமை குறித்து மக்கள் குழு பிரதிநிதிகள் தளபதியுடன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 16

கடந்த 4ஆம் திகதி ஆயுதக்குழு ஒன்றினால் மூன்று மாணவர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், அதன் பின் உருவாகியுள்ள நிலைமை தொடர்பாகவும் ஆராயும் சந்திப்பு இன்று பலாலியில் இடம் பெறவுள்ளது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறியுடன் நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்து கொள்ள உள்ளனர்.

மக்கள் குழுவின் கூட்டம் ஒன்று நேற்றுப்பிற்பகல் யாழ்.ஆயர்இல்லத்தில் இடம் பெற்றது.

மாணவர்கள் கடத்தப்பட்டதன் பின் உருவாகியுள்ள நிலைமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ்.தளபதியை இன்று சந்திப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் செல்லும் ஐவர் குழு தளபதியை இன்று சந்திக்கிறது. (அ-1)

## மரண தண்டனை அச்சுறுத்தல்: பல்கலை.நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகத் தளபதி தகவல்

யாழ்ப்பாணம், மே 16

குறிப்பிட்ட சில மாணவர்கள், விரிவுரையாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கப் போவதாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் அரசாங்க அதிபருடன் தாம் தொடர்பு கொண்டிருப்பதாக யாழ். படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்திருக்கின்றார்.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி, யாழ்.தளபதியை நேற்றுச் சந்தித்துப் பேசினார். அச்சந்திப்பின்போதே மேற்சொன்ன தகவல் வெளியிடப்பட்டது.

நேற்றுப் பிற்பகலில் பலாலியில் நடைபெற்ற சந்திப்பின்போது -

மூன்று பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளதால், உயர் கல்வி மற்றும் கல்வி நிறுவனங்களில் பகிஷ்கரிப்பு இடம்பெற்றுவருகின்றது. இதன்காரணமாகக் (08ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலையில் கற்றல் செயற்பாடுகள் நேற்று முற்றாக ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே16

யாழ். பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் யாவும் நேற்று முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன. நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து சுவரொட்டி ஒட்டப்பட்டதை அடுத்தே இந்த நிலை தோன்றியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 352 பேருக்கு தலைப்பிட்டு மரணதண்டனை விதிக்கப்படவுள்ளதாக பல்லைக்கழக வளாகத்தில் நேற்றுமுன்தினம் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அதனை அடுத்து நேற்றையதினம் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் முற்றாக வரவில்லை. அதனால் கற்றல் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

பாடசாலை மாணவர்களின் கைதைக் கண்டித்து கடந்த வாரம் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும் திங்கட்கிழமை விரிவுரைகளுக்கு மாணவர்கள் சமுகமளித்தனர்.

காலை 8 மணிக்கான விரிவுரைகளில் மாணவர்கள் ஈடுபட்டிருந்தவேளையில் மாணவர் (08ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளில் மாணவர்களின் வரவு நேற்றும் வெகுகுறைவு

யாழ்ப்பாணம், மே 16

குடாநாட்டில் பாடசாலைகளில் நேற்றும் மாணவர்களின் வரவு ஐந்தாவது நாளாக வெகுவாகக் குறைந்திருந்தது.

யாழ்.நகரப் பாடசாலைகளில் நேற்றும் மாணவர்களின் வருகை மிகக் குறைந்திருந்தது. சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜேம்ஸ் வித்தியாலயம், சென்.மேரிஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு காலையில் வந்த மாணவர்கள் மீண்டும் திரும்பிச்சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வேறு பல பாடசாலைகளிலும் உயர்தர மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்தது.

வடமராட்சிப் பிர்தேசப் பாடசாலைகளிலும் மாணவர் வரவு மிகக் குறைந்திருந்தது. சில பிரபல பாடசாலைகளில் மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே நேற்று வருகைதந்திருந்தனர். பாடசாலைகளைச் சூழ இராணுவத்தினர் நின்றதுடன் பாடசாலைகளுக்குள் சென்று மாணவர்களின் விவரம் குறித்து அறிந்து சென்றதாகக் கூறப்படுகின்றது. (அ-202-68-155-51)

## மருதனார்மடத்தில் பஸ்ஸுக்குத் தீ!

யாழ்ப்பாணம், மே 16

மருதனார்மடம், உரும்பிராய் வீதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. மானிப்பாய்க்கும் சாவகச்சேரிக்கும் இடையே சேவையில் ஈடுபட்ட 811ஆம் இலக்க பஸ்ஸே இவ்வாறு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாயக் கல்லூரிக்கு அண்மையில் கல்லூரி மாணவர்களை இறக்குவதற்காக பஸ் தரித்து நின்றபோது முகத்தைத் துணியால் மறைத்த நிலையில் பஸ்ஸில் ஏறிய இனந்தெரியாதவர்கள் பயணிகளை இறக்கிவிட்டு பஸ்ஸிற்குத் தீயிட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சுன்னாகம் பொலீஸாரும் இராணுவத்தினரும் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

பஸ் முழுமையாகத் தீக்கிரையாகியுள்ளது. பஸ்ஸில் பயணித்த அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், சந்தை வியாபாரிகள் அனைவரும் இறக்கிவிடப்பட்டதால் அவர்கள் மருதனார்மடம் சந்திவரை நடந்து சென்று பஸ்ஸில் பயணத்தைத் தொடர்ந்தனர். (அ-202-68-207-45)

## பல்கலைக்கழக சமூகத்துக்கு எச்சரிக்கை விடுத்து துண்டுப் பிரசுரம் வெளியிடவில்லை என மறுப்பு

யாழ்ப்பாணம், மே 16

பல்கலைக்கழக சமூகத்தினருக்கு மரணதண்டனை எச்சரிக்கை விடுத்துத் தாம் துண்டுப் பிரசுரம் எதனையும் வெளியிடவில்லை என்று ''நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு - யாழ். மாவட்டம்'' நேற்று அறிவித்தது.

அப்பாவி பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியை நாசம் செய்யும் விதத்தில் எமது அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்; மறுக்கிறோம் என்று நேற்று வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் மேற்படி அமைப்புத் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் போர் வையில் ஒளிந்து நின்று செயற்படும் பயங்கரவாதிகளுக்கு இறுதி எச்சரிக்கை என்று அப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

உண்மையான பயங்கரவாதிகளின் விவரங்கள் தமக்குக் கிடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து எட்டுப் பேரின் பெயர்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் எட்டுப் பேரும் இரண்டு பயங்கரவாதிகளுக்கு (பெயர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன) விடுதியில் தங்குமிட வசதிகளைச் செய்து கொடுத்தும் - அப்பாவி மாணவர்களுக்கு ஆயுதப்பயிற்சி கொடுத்தும், பாடசாலை மாணவர்களையும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுத்தியும் - வருவதாகவும் (08ஆம் பக்கம் பார்க்க)




## முகமாலையில் நேரடி மோதல்

கொழும்பு, மே 16

முகமாலையில் படையினரின் முன்னரங்கக் காவலரண் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் நேற்றுக்காலை 6 மணியளவில் நேரடி மோதல் ஒன்று இடம்பெற்றதாக தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும், ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் படையினர் தெரிவித்துள்ளனர். பதில் தாக் (08ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பா வாழ் தமிழர்களும் தீர்வு யோசனை முன்வைப்பர்

பேர்லின், மே 16

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படை அரசமைப்பு யோசனை ஒன்றை முன்வைப்பதற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்ப் புலமையாளர்கள் தயாராகிவருகின்றனர்.

அடுத்த மாதம் 9,10ஆம் திகதிகளில் பேர்லினில் கூடவுள்ள புலமையாளர்கள் கூட்டத்தின் இறுதியில் இந்த அடிப்படைத் தீர்வு யோசனைகள் வெளியிடப்படவுள்ளன - என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தயாரிப்பதற்கென அமைக்கப்பட்டுள்ள சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு இந்த யோசனைகளை தமிழர்கள் சார்பில் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

தமிழ்ப் புலமையாளர்கள் கூட்டம் 1988 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது.

இந்த ஆண்டு கூட்டத்தில், 'ஐரோப்பிய நாடுகளில் இரண்டாவது தமிழ்த் தலை முறை எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்' என்ற விடயம் பற்றியும் ஆராயப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்களில் ஒருவரான பரா குமாரசாமி தெரிவித்தார். (...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பநிலை குறைந்தது

நல்லூர், மே 16

குடாநாட்டின் தற்போதைய வெப்பநிலை 32 பாகை செல்சியஸாக குறைந்துள்ளதாக வளிமண்டல திணைக்கள பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்தார்.

தற்போது வீசிவரும் பலத்த காற்றினாலேயே வெப்பநிலையின் அளவு குறைவடைந்துள்ளதாகவும் -

கடந்த ஏப்ரல் மாதம் 35 பாகை செல்சியஸாகவும் -

கடந்த 3 ஆம் திகதி 36 பாகை செல்சியஸாகவும் இருந்த வெப்பநிலை தற்போது குறைவடைந்துள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(202-111)

# நிறுவைப் பொருள்களின் விலைகள் ஒரு ரூபா குறையும்

யாழ்ப்பாணம், மே 16

சகல பல நோ.கூ. சங்கக் கிளைக்களும் அனைத்து நிறுவைப் பொருள்களுக்கான விற்பனை விலையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு ரூபாவால் குறைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்யுமாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி நிறுவைப் பொருள்களுக்கான சேவைக் கட்டணம் 3 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் - எனவே உடனடியாக விற்பனை விலையை ஒரு ரூபாவால் குறைக்குமாறும் - அரச அதிபர் தெரிவித்துள்ளார். (1-202)

# 31ஆம் நாள் நினைவலைகள்...



## ஐயாத்துரை சரஸ்வதி

மலர்வு: 12.05.1930

உதிர்வு 16.04.2007

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
பேணிப் பாதுகாத்து எம்மை பல வழிகள்
காட்டி இன்று வானுறையும் தெய்வமாகி
விட்ட எமது அன்புத் தெய்வத்தின்
நினைவுகளை என்றும் எமது
நெஞ்சங்களில் சுமந்த வண்ணம்
எமது கண்ணீர்ப் பூக்களை அவரின் பாதக்
கமலங்களில் காணிக்கையாக்குகின்றோம்.
''தாயினைப் போலத் தெய்வம்
தரணியில் இல்லை''

132/1 பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5443

(60666)

குடும்பத்தினர்.

# தவறிவிட்டது

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி பரமானந்த தயாளன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (672791774V), விசேட அடையாள அட்டை (0906015865)யும் உடுவிலுக்கும், யாழ். மையப்பகுதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தொ.பே. 0776447454.

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 17 - 03 - 1947



மறைவு 02 - 04 - 2007

## அமரர் ஆரோக்கியநாதர் யேசுதாசன்

(சித்தப்பா)

கடந்த 02.04.2007 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (16.05.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

271, பலாலி றோட்,
கந்தர்மடம். (60663)

மனைவி, மாமிமார், சகலன்மார்,
மைத்துனிமார், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# தவறிவிட்டது

[illegible] (566422913v), [illegible] (813000553v), [illegible] (846972129v) ஆகியோரின் தேசிய அ.அட்டைகள் 13.05.2007 [illegible] தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் [illegible] முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (60660)

# தவறிவிட்டது

புத்தூர் கிழக்கு, புத்தூர் என்னும் முகவரியைச் சேர்ந்த மாசிலாமணி குகப்பிரகாசம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (621291564v) அச்சுவேலி பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஐயம்பிள்ளை நடராசா புத்தூர் கிழக்கு, புத்தூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

# சில்லாலையூர் கதிரைமாதாவுக்கு நன்றி நவிலல்

குன்றா இறைமையுடன்
சில்லையூரில் கோயில் கொண்டு
இருக்கும், கதிரைமாதா ஆரோக்கிய
மாதா மருந்து மாதா தஸ்வே நிசு
என்னும் மாமரி என சில்லையூர்
மக்கள் அழைக்கும்
கதிரை மாதாவிடம்
எனது மகளின் வருத்தம் குணம்
அடைய வேண்டினேன்.
மாதா என் மன்றாட்டை ஏற்று
குணப்படுத்தியுள்ளார்.
அன்னையின் நாமம் சதாகாலமும்
வாழ்த்தப்படுவது.

(60653) - அன்னையின் அடியவன்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 03 - 1931



உதிர்வு 26 - 05 - 2006

## அமரர் மாதர் செல்லத்துரை

**திதி: வைகாசி அமாவாசை 16.05.2007**

*திண்ணிய திடவுழைப்பில் தேடித் திருச் சேர்த்தீர்!*
*வண்ணமுற வளர்த்துலகில் வளமோடு வாழ வைத்தீர்!*
*கண்ணின் மணியாய் காலமெல்லாம் எமைக்காத்தீர்!*
*விண்ணேகி என்றும் வழிகாட்டும் ஒளிச்சுடரே!*
*மண்ணுலகில் நின்பணியும்; நின்றசீர் நெடுநெறியும்*
*என்றென்றும் எமைக்காக்கும் நெஞ்சம் உள்ளவரை*
*நாம் மறவோம் என்றென்றும் இறைஞ்சுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பயிற்றேலை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(சி-52401)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

AutoCAD
MS -Office
Internet E-Mail

ஆரம்பம்
பிரிவு1: 19-05-2007 11.30AM
பிரிவு2: 20-05-2007 11.30AM

Hardware Engineering & Networking
DeskTop Publishing (DTP)
Programming Courses:-
(VB, C, C++,Java,etc..)
Web Designing:-
(HTML, XML, etc...)
சிறுவர்களுக்கான KIDS & Games
தரம் 10,11 மாணவர்களுக்கான ICT
A/L மாணவர்களுக்கான GIT

மேற்படி திகதிகளுக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்

Our Services
* PC Repairing * PC Sales * CD Writing
* CD Sales * Printing & Scanning

SCOT
T.P: 0776701394
கற்குழி 1ம் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

# பரு/தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்த வெளிமடை - 2007

மேற்படி உற்சவம் 2007.05.18ஆம் மற்றும் 2007.05.19ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி) நடைபெறவுள்ளது.

''மடைப்பண்டம்'' வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிப்பூசையுடன் எடுக்கப்படும்.

காவடி, கரகம், பாற்செம்பு நேர்த்திக்காரர்கள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு முன்னர் நேர்த்திகளைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

''வெளிமடைப் பூசை'' சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

*கோயில் பகுதியில் இரவு நேரம் எவரும் தங்க அனுமதியில்லை*

பாரம்பரியமிக்க மேற்படி வெளிமடை உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும் நாடப்படுகின்றது.

சபா ரவீந்திரன் J.P.U.M
தலைவர்.

(சி-52419)

கா.புஸ்பராசா
செயலாளர்.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தர்மபரிபாலன சபை

# உயிர் காத்திட உதவுங்கள்



ஏழாலை மேற்கைச் சேர்ந்த
**சொக்கலிங்கம் யோகேஸ்வரன்**
என்பவருக்கு O- வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகிறது. வழங்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

*நிரோஷா விடியோ விஷன்*
ஏழாலை மேற்கு, ஏழாலை.
T.P. 060 221 3232
0779668141

(60655)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ரூபி புஸ்பவதி ஞானதுரை



அராலி வடக்கைச் சேர்ந்த ரூபி புஸ்பவதி ஞானதுரை அவர்கள் 14.05.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஞானதுரையின் மனைவியும், வைத்தியநாதன், சபாநாதன், சத்தியநாதன், பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சற்குணதேவி, சத்தியதேவி, மாகிரட், சத்தியமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும், Dr. தர்ஷன், சுதன், பிரியா, லோஜி, ஷிறானி, நிரோஷி, சிறோமி, சோபனா, செல்வன், செல்வி ஆகியோரின் அம்மாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அராலியில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகேந்திரமடம்,
அராலி வடக்கு. (60658)

தகவல்
சபாநாதன் (சகோதரன்)

## மரிசிலின் சிசிலியா



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமானவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரிசிலின் (இராசதுரை) சிசிலியா (சின்னம்மா) 14.05.2007 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கஸ்பானு இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மரியான் - மதிலேனாள் தம்பதியரின் ஆசை மகளும் காலஞ்சென்றவர்களான கஸ்பானு- தொம்மாசி தம்பதியரின் அன்பு மருமகளும் எட்மன், சோதி (இத்தாலி) மகேந்திரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயும் கொலஸ்ரிகா, அரியம் (இத்தாலி), வனஜா (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான அந்தோனியா, அந்தோனி, செரிசில், மரிசிலியான் மற்றும் றூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (16.05.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை மேற்கு,
மொங்கானைப்புலம்,
வேலணை 2ஆம் வட்டாரம். (60661)

தகவல்
க.இராசதுரை (கணவர்)

## பரமசாமி சண்முகலிங்கம்



ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (15.05.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி - கனகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் கோடீஸ்வரி, காலஞ்சென்ற கோபாலசிங்கம் மற்றும் தில்லைநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற சரோஜினி மற்றும் சதானந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற நடேசபிள்ளை மற்றும் நவரத்தினராசா, அருச்சுனராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற கிருஸ்ணராஜா ஆகியோரின் சகோதரரும் பிரபாகரன் (சுவிஸ்), சுபாஜினி (லண்டன்), கிருசாந்தி (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாதேவன் (லண்டன்), சிவனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் பவிஸ்ஷியா, லதீசன், சிவஹரிணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு. (60664)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் விமானத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வல்ல திறன் 'மிக்' விமானங்களுக்கு உண்டா?



மிக் 29

**விடுதலைப் புலிகளின் வான்படை குறித்து நிபுணர்கள் பலரும் கருத்துக் கூறும், விமர்சிக்கும் காலம் இது. சென்னை சமகால ஆய்வு மையத்தின் பணிப்பாளர் பி.இராமனின் கருத்துக்களும் விமர்சனங்களும் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.**

கேள்வி: விடுதலைப் புலிகளின் விமானங்கள் குறித்த விவகாரத்தில் தெளிவற்ற பதில்கள் அடங்கிய பல வினாக்களுக்குப் பதில் தேட வேண்டியுள்ளது. அந்தவகையில், விடுதலைப் புலிகள் அமைப்பு இந்த விமானங்களை எந்த நாட்டிலிருந்து கொள்வனவு செய்துள்ளனர் எனக் கூறமுடியுமா?

பதில்: இந்த எல். வர்க்கத்தைச் சேர்ந்த விமானங்களைக் குறிப்பிட்டுக் காட்டும் வகையில் 'வாவ்ப்' நிறுவனத்தால் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் புகைப்படங்களை அவதானித்துப் பார்க்கும்போது, அவை தென்னாபிரிக்காவில் செயற்படும் விமானப் பறப்புப் பயிற்சிகளை வழங்கும் தனியார் நிறுவனமொன்றில் இருந்துகொள்முதல் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கூறமுடியும்.

இந்த வகை விமானங்கள், 'மொறவன் எவியேசன்' என்றசெக்கோஸ்லோவாக்கிய நிறுவனத்தால் தயாரிக்கப்படுவனவாகும்.

### விமானம் வாங்குவதற்குப் பணம் பெற்றது எப்படி?

கேள்வி: விடுதலைப் புலிகள் அமைப்பு, இந்த விமானக் கொள்வனவுக்கான தொகைகளை எவ்விதம் செலுத்தியிருக்கக்கூடுமெனக் கூறமுடியுமா?

பதில்: விடுதலைப் புலிகள் அமைப்பின் பெருமளவு நிதிப் பரிமாறல்கள் ஐரோப்பாவின் ஊடாகவே மேற்கொள்ளப்படுவதால் அவ்விதமான கொள்முதல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வது எவ்விதத்திலும் சிக்கலுக்குரியதல்ல. அந்தவகையில் அத்தகைய நிதிப்பரிமாறல்கள் ஐரோப்பிய நிறுவனமொன்றின் ஊடாகவே குறிப்பிட்ட தென்னாபிரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருக்கலாம்.

கேள்வி: விடுதலைப் புலிகள் அமைப்பு, இந்த விமானங்களைத் தமது கட்டுப்பபாட்டுப் பிரதேசத்துக்குள் எவ்வாறு கொண்டு சென்றிருக்க முடியுமெனத் தாங்கள் கருதுகிறீர்கள்?

பதில்: இந்த வகை விமானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் அவ்விமானங்களை உதிரிப்பாகங்களாகவே விநியோகித்துள்ளது. எனவே, சந்தேகத்துக்கு இடமளிக்காத விதமாக வர்த்தகத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் கனரக வாகனங்களின் உதிரிப்பாகங்களே அவை எனக் கருதப்படும் விதமாக அவை விநியோகிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுள்ளது.

எவ்வாறோ, போலியாகத் தயாரிக்கப்பட்ட கொள்வனவுச் சிட்டைகள் மற்றும் ஆவணங்கள் முன்வைக்கப்பட்தன் பின்னர் இவை கடல் மார்க்கமாகவே எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்பது தெளிவாகப் புலப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுகத்தில் செயற்படும் சுங்கத் திணைக்களத்திடமும் அப்போலி ஆவணங்களே சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடும் எனவும் கருதமுடிகிறது.

### மிக நுட்பமான தாக்குதல்

கேள்வி: விமானப் பறப்புப் பயிற்சிகளை மாத்திரமின்றி விமானத்திலிருந்து குண்டுகளைப் போடும் பயிற்சிகளையும்கூட, விடுதலைப் புலிகள் அமைப்பு தமது விமானிகளுக்கு வழங்கியுள்ளது. இவை எவ்வாறு சாத்தியமாகியுள்ளன? இத்தகைய செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்கிய தரப்புகள் எவை?

பதில்: இந்த விமானங்களை செக்கோஸ்லோவோக்கியாவிலிருந்து தருவித்துக் கொண்ட விமானப் பறப்புப் பயிற்சிகளை வழங்கும் தென்னாபிரிக்க நிறுவனமே பூரணமான விமானப் பறப்புப் பயிற்சிகளையும் விமான இயக்கம் குறித்த நிபுணத்துவத்தையும் அந்த விமானிகளுக்கு வழங்கியிருக்கக்கூடும்.

அதேவேளை, தென்னாபிரிக்க நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தங்களில் தென்னாபிரிக்கா நிறையவே அனுபவங்களைப் பெற்றுள்ளது. அந்தவகையில் குண்டுகளைப் போடும் பயிற்சி மற்றும் நிபுணத்துவம்கூட விமானப் பயிற்சிகளை வழங்கும் தென்னாபிரிக்க நிறுவனமே அந்த விமானிகளுக்கு அத்தகைய பயிற்சியை வழங்கியிருக்கக்கூடும்.

அத்தகைய பயிற்சி அனுபவங்களின் தேர்ச்சி காரணமாகவே கொழும்பு மீதான தமது முதலாவது வான் தாக்குதலை அவர்களால் இரவில் மேற்கொள்ள முடிந்தது. மிகச் சிறப்பான வான்பறப்புப் பயிற்சியும் உயர்மட்ட நிபுணத்துவமும் இருந்தால் மாத்திரமே விமானியொருவரால் அத்தகைய தாக்குதலொன்றை மேற்கொள்ளமுடியும்.

அந்தவகையில், இரவில் விமானங்களில் பறந்து வான் தாக்குதல்களை மேற்கொள்வது தென்னாபிரிக்க விமானிகளுக்கு கைவந்த கலையாகும். இத்தகைய தாக்குதல் தொழில்நுட்பம் மிகுந்த பிரபல்யம் வாய்ந்த 'புஷ்பிளையிங்' உத்தி என்றே அறிமுகப்படுத்தப்படுகிறது.

கேள்வி: விடுதலைப் புலிகளின் விமானங்களுக்கு விமானங்களுக்கெனப் பயன்படுத்தும் எரிபொருள்களும் எங்கிருந்து கிடைத்திருக்கக்கூடும்?

பதில்: விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் இனத்தைச் சேர்ந்த விமானங்களுக்கு எந்தவொரு எரிபொருளையும் பயன்படுத்த முடியும். விமானங்களுக்கெனத் தயாரிக்கப்படும் விசேட எரிபொருள் அவற்றுக்கு அவசியமல்ல. டீசலைப் பயன்படுத்தியும்கூட அவற்றை இயக்கிவிடமுடியும். விமானப் பறப்புப் பயிற்சிகளை வழங்கும் பெரும்பாலான நிறுவனங்கள் தமது பறப்பு விமானங்களுக்குப் பல்வேறு வகை எரிபொருள்கள் மூலம் இயங்கும் இயந்திரங்களையே பொருத்தியுள்ளன. அந்த உத்தி மூலம் விமானப் பறப்புப் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் எரிபொருள் செலவினத்தை பெருமளவில் மிச்சப்படுத்திக் கொண்டுள்ளன.

### பலாலியில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது கஷ்டமானதே

கேள்வி: இத்தகைய விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் மற்றும் உத்திகள் குறித்து மிக உன்னிப்பான அவதானிப்பும் அவற்றை இனங்கண்டு கொள்ளும் ஆற்றலும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். ஆனால், இலங்கை விமானப்படையிடம் அத்தகைய ஆற்றல் வாய்ந்த தன்மை இல்லையென்றேகூறவேண்டியுள்ளதல்லாவா?

பதில்: விமானப் படையினரிடம் அத்தகைய ஆற்றல் இல்லையெனக் கூறிவிட இயலாது. ஆனால், அந்த ஆற்றலை அவர்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. அத்தகைய உன்னிப்பான அவதானிப்புகளை நிலமட்டத்தில் பொருத்தப்பட்டிருக்கும் தொழில்நுட்பச் சாதனங்கள் மூலமாகவோ அல்லது இஸ்ரேல் விமான நிறுவனத்தால் வழங்கப்பட்டிருக்கும் சாதனங்களைக் கொண்டோ தான் மேற்கொள்ளமுடியும். அத்தகைய சாதனங்களால் இலகுரக விமானங்களை இனங்கண்டுவிடமுடியும். ஆனால், நிலமட்டத்திலிருந்து ஏவி விடப்படும் தாக்குதல்கள் மூலமாகவோ அல்லது உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தும் விசேட தாக்குதல்கள் மூலமோ அவற்றை அழித்துவிடமுடியும்.

அதேசமயம் விசேட ஆற்றல் வாய்ந்த ராடர் தொகுதிகளைப் பொருத்துவதன் மூலம் எதிர்காலத்தில் கொழும்பை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் வான்தாக்குதல்களைத் தடுத்து நிறுத்திவிடமுடியும். ஆனால், விடுதலைப் புலிகளின் பிரதேசங்களிலிருந்து குறுகிய தொலைவில் அமைந்திருக்கும் பலாலி போன்ற பிரதேசங்களைப் பொறுத்தவரையில் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது ஓரளவு கஷ்டமானதே.

### எறும்பை நசுக்குவதற்கு கோடரியைப் பயனப்படுத்துவது போலாகும்

இந்த விடயம் குறித்து நோக்கும்போது மேலும் சில வினாக்கள் எழுகின்றன. அதாவது கடந்த 2007 மார்ச் 26ஆம் திகதியன்று கொழும்பில் விடுதலைப் புலிகளால் வான் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளையில், இந்தியாவின் 'பெல்' நிறுவனத் தயாரிப்பான இந்திரா - 2 ராடர் தொகுதிகளே அப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்தன. அன்றைய தினத்தில், அத்தொகுதிகள், சில திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதற்காக செயலிழக்கச் செய்யப்பட்டிருந்ததை விடுதலைப் புலிகள் தெரிந்து வைத்திருந்தனரா? என்பதும் கேள்விக்குரியதாகிறது.

அவ்வாறின்றேல் அச்சந்தர்ப்பத்தில் அந்த ராடர் தொகுதிகள் செயற்படாது இடைநிறுத்தி வைக்கப்படும் அளவுக்கு நிர்ப்பந்தம் இருந்துள்ளதா? என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றே. இருந்தபோதிலும் இச்சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிடவேண்டியுள்ள. அதாவது, இத் தகைய கண்காணிப்புகளுக்கு இந்திரா-2 ராடர்களைப் பயன்படுத்துவதானது. எறும்பை நசிப்பதற்குப் பாரிய அளவிலான கோடரியைப் பயன்படுத்துவதற்கு ஒப்பானதாகும். அத்தகைய ராடர் கருவிகளால் ஏறத்தாழ 500 அடி உயரத்தில் வேகமாகப் பறக்கும் விமானங்களை மாத்திரமே இனங்கண்டு கொள்ள முடியுமென்பதே சிக்கலுக்கான காரணமாகும்.

ஆனால், உல்லாசப் பறப்புகளுக்குப் பரீட்சார்த்த மட்டச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படும் மிகத் தாழ்வாகப் பறக்கும் இத்தகைய விமானங்களை இனங்கண்டு கொள்வதற்கு அத்தகைய ராடர் தொகுதிகள் பயன்படுத்தப்படுவில்லை. ஏனெனில், அவை ராடர் கருவிகளின் கண்காணிப்புக்குப் புலப்படுவதில்லை. நில மட்டத்திலிருந்து 200 அடிகள் வரையான உயரத்தில் பறப்புகளை மேற்கொண்டு வான் தாக்குதல்களை நிழ்த்துவதற்கோ தென்னாபிரிக்காவில் இத்தகைய விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### கண்காணிப்புக்கு உகந்த ராடர் கொள்வனவுக்கு பெருந்தொகைப் பணம் தேவை

எனவே, தற்போது இலங்கை விமானப் படையால் பயன்படுத்தப்படும் இந்தியத் தயாரிப்புகளான ராடர் கருவிகள் அத்தகைய தாழப்பறக்கும் விமானங்களைக் கண்காணிக்கப் பயன்படமாட்டா. அந்த வகையில் நிலமட்டத்திலிருந்து ஓரளவு உயரத்தில் பறக்கும் பொருளொன்றை இனங்காட்டும் விதமாக இஸ்ரேலில் தயாரிக்கப்படும் ராடர் கருவிகளே இன்றைய நிலையில் இலங்கை விமானப்படையின் பயன்பாட்டுக்குப் பொருத்தமானவை ஆகும்.

## பலாலியில் தடுப்பு நடவடிக்கை கஷ்டமானதே

இத்தகைய இலகுரக விமானங்களை அந்த ராடர் கருவிகள் இனங்காட்டிவிடும். அத்தகைய ராடர் தொகுதிகளைக்கொள்வனவு செய்வதற்குப் பெருந்தொகைப் பணம் செலவிட வேண்டியுள்ளது. ஆயினும் கொழும்பின் பாதுகாப்புக் கருதி அத்தகைய ராடர் கருவிகளின் கொள்வனவு தொடர்பாக இலங்கை விமானப் படை சீன அரசுடன் தற்போது பேச்சுகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரியவருகிறது.

எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளின் விமானங்களை வான் பரப்பில் வைத்தே தாக்கி அழித்துவிடும் ஆற்றலை இலங்கை விமானப்படை பெற்றிருக்க வேண்டியது மிக அத்தியாவசியம் ஆகும். அந்தவகையில் தரையிலிருந்து ஏவிவிடப்படும் தாக்குதல்களிலிருந்து விடுதலைப் புலிகளின் விமானங்கள் தப்பித்துக்கொண்டாலும் வான்பரப்பிலிருந்து தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு அவை முகம்கொடுக்க நேரும். தற்போது இலங்கை விமானப்படை வசமிருக்கும் விமானங்கள், ரஷ்ய, உக்ரேன் மற்றும் இஸ்ரேல் தயாரிப்புகளாக இருந்தாலும்கூட, குண்டுத்தாக்குதல்களை மேற்கொள்வதில் அவை ஆற்றல் மிக்கவையே.

### தாக்குதலுக்கு முகம்கொடுக்கும் திறன் 'மிக்' விமானங்களிடம் குறைவு

ஆயினும், வான் பறப்பின் போது எதிரி விமானங்களைத் தாக்கி அழித்துவிடுவதற்கு அவை பொருத்தமானவை அல்ல. அத்தகைய விமானங்கள் நில மட்டத்திலிருந்து வானில் எழுவதற்கு மிக நீண்ட விமான ஓடு பாதை தேவைப்படுகிறது. அத்தகைய வசதிகளின்றி அவற்றால் வேகமாக வான் பரப்பை நோக்கி எழ இயலாது. இலகுவாகக் கையாளக்கூடியதும் எந்தவோர் இடத்திலிருந்தும் வான்நோக்கி மேலெழக்கூடியதுமான விமானங்களே தற்போது இலங்கை விமானப்படைக்கு அவசிய தேவையாகியுள்ளது. அதே போன்று மிகச் சிறப்பாகப் பயிற்றப்பட்ட விமானிகளின் சேவையும்கூட அத்தியாவசியமாகிறது.

இலங்கை விமானப்படை வசம் இருக்கும் 'கிபிர்', 'மிக்' விமானங்கள், வான்பரப்பிலிருந்து ஏவும் ஏவுகணைகளைக் கொண்டவையாக இருந்தபோதிலும் எதிரி விமானங்களால் வான் பரப்பிலிருந்து தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்கும் சாதனங்கள் அந்த வகையில் விமானங்களில் இல்லாதிருப்பதே 'மிக்' விமானங்களில் காணப்படும் குறைபாடாகும்.

விசேடமாக இரவில் வான் பரப்பிலிருந்து தனக்கெதிராகத் தொடுக்கப்படும் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு அத்தகைய சாதனம் தாக்குதல் விமானமொன்றில் அமைந்திருக்கவேண்டியது இன்றியமையாததாகும். 'கிபிர்' விமானங்களில் அத்தகைய எதிர்த்தாக்குதல்களை இனங்காட்டும் ராடர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால், வான் பரப்பிலிருந்து ஏவிவிடப்படும் எதிர்த்தாக்குதலொன்று ஒரு நிமிடம் 57 செக்கன்களுக்குள்ளாக விமானமொன்றை முற்றாக அழித்துவிடும் ஆற்றல் வாய்ந்ததாகும். எனவே, அந்த மிகக் குறுகிய நேர இடைவெளிக்குள் தன்னை நோக்கிவரும் அத்தகைய எதிர்த்தாக்குதலை முறியடித்துவிடும் விதமாகப் பதில் தாக்குதலை விடுக்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டியுள்ளது.

ஆனாலும், சிறிய விமானங்களை வீழ்த்திவிடுவதற்குத் தற்போது இலங்கை விமானப்படையின் வசத்தில் இருக்கும் தாக்குதல் விமானங்களைப் பயன்படுத்துவதானது பெரும் செலவினத்தை ஏற்படுத்திவிடுமொரு காரியமே. தோள்களில் வைத்து ஏவிவிடக்கூடிய ஏவுகணைகள் பொருத்தப்பட்ட சாதனங்கள் அத்தகைய சிறிய விமானங்களை அழித்துவிடுவதற்குப் போதுமானவை ஆகும். ரஷ்யா, சீனா போன்ற நாடுகளிலிருந்து அவற்றைப் பெறமுடியும். மிகத் தாழ்வாகப் பறக்கும் எந்தப் பொருளொன்றினையும் இனங்காட்டும் ராடர்களும் தற்காலத்தில் பாவனையில் இருப்பதால் இவற்றைப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் செலவினத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும் முடியும்.

### யாழ்ப்பாணம் - இராமேஸ்வரம் கடற்பரப்பில் செல்லும் கப்பல்களைப் பயன்படுத்த முடியும்

விடுதலைப் புலிகளின் விமானங்களை இனங்கண்டுகொள்வதற்கு இரண்டு விதமான உத்திகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஒன்று அவற்றை இனங்கண்டு கொள்ள செயற்கைக் கோள் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதாகும். அடுத்தது, சிறிய ரக விமானங்களைப் பயன்படுத்திக்கொள்வதன் ஊடாக அவற்றைக் கண்டறிந்துகொள்வதாகும். அந்த வகையில், விடுதலைப் புலிகளின் விமானங்கள் நில அறைகளில் மறைத்துவைக்கப்படாதிருக்கும் பட்சத்தில் அவற்றை மிக இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியும்.

விடுதலைப் புலிகளின் விமானங்களிலிருந்து வெளிப்படுத்தப்படும் சமிக்ஞைகளை இனங்கண்டுகொள்ளும் தொழில்நுட்ப வசதிகொண்ட சிறிய விமானங்களைப் பயன்படுத்திக்கொள்வதும் நல்லதொரு முயற்சியாகும்.

ஆனால், அத்தகைய விமானங்களுக்கு விடுதலைப் புலிகளின் விமானங்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டதன் பின்னர், அவை அந்தவிமானங்களைக் கண்டறிந்து தகவல் வழங்குவதற்குச் சுமார் பத்து மணித்தியாலங்கள் வரை வானில் தனது பறப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அது அதிக செலவினத்தை ஏற்படுத்துவதற்கு வழி வகுத்துவிடும் என்பதால் அத்தகைய முயற்சி சாதகமற்றதாகும்.

இந்தியக் கப்பல்கள் மற்றும் கடற்பாதுகாப்புக் கலங்களில் சமிக்ஞைகளின் ஊடாகச் சென்று வானில் பறக்கும் பொருளொன்றை இனங்காட்டிவிடும் சாதனங்களைப்பொருத்தும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பாதுகாப்பு நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். முக்கியமாக ராமேஸ்வரம் மற்றும் யாழ்ப்பாணம் என்பவற்றுக்கு இடையிட்ட கடற்பரப்பில் பயணிக்கும் கடற்கலங்களில் இத்தகைய ராடர் கருவிகளைப்பொருத்துவதன் மூலம் சிறப்பான பலனை ஈட்டிக் கொள்ளமுடியும். ❋

தமிழில்: நாடோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An Australian Government Initiative

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் முன் ஏற்பாடு

# Australian Scholarships

THE PATHWAY TO EXCELLENCE

# ஆஸ்திரேலிய புலமைப்பரிசில்கள் திறமையை நோக்கிய வழிகாட்டல்

ஆஸ்திரேலிய புலமைப்பரிசில்கள் ஒரு A$ 1.4 பில்லியன் பெறுமதியான ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் முன் ஏற்பாடாகும். 2006இல் ஆரம்பிக்கப்பட்ட இது ஐந்து ஆண்டு காலத்திற்கு மேலாக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 19,000 புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் இருக்கும் உயர் சாதனையாளர்கள் ஆஸ்திரேலியாவில் உயர் கல்வி கற்பதற்கும் ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்சார் மேம்பாடுகளைப் பெறுவதற்கும் இந்தப் புலமைப்பரிசில்கள் சந்தர்ப்பங்களை வழங்குகின்றது.

ஆஸ்திரேலியாவில் 2008 இல் கலைமாமணி (**Master**) மற்றும் கலாநிதி (**Doctor**) பட்டங்களைப் பெறுவதற்கு தகுதியுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து ஆஸ்திரேலிய அரசாங்கம் விண்ணப்பங்களைக் கோருகின்றது.

தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஒரு சில புலமைப் பரிசில்கள் முனைப்பு விருதுகள் (**Endeavour award**) என்ற அடிப்படையிலும் வழங்கப்படவிருக்கின்றன.

ஆஸ்திரேலிய புலமைப் பரிசில்கள் திட்டமானது ஒரே தலைப்பின்கீழ் மூன்று முக்கிய புலமைப்பரிசில் திட்டங்களை உள்ளடக்குகின்றது. அவையாவன.

**ஆஸ்திரேலியாவின் மேம்பாட்டுப் புலமைப்பரிசில்கள் (ADS)**

இலங்கை அரசாங்க ஊழியர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். விண்ணப்பதாரிகள் 45 வயதுக்குட்பட்டவர்களாகவும் திறமையான பட்டதாரி மாணவர் (**Under graduate**) மற்றும் பட்டப்பின் படிப்பாளர் (**Post graduate**) என்ற தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் தொழில் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். **IELTS** இல் 6.0 புள்ளிகளுக்கும் குறையாமல் எடுத்திருக்கவேண்டும்.

புலமைப் பரிசில்கள் முதுமாணி மட்ட கல்வியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். (ADS) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் புலமைப்பரிசில்களில் அரைப்பங்கு பெண்களுக்கென்றே ஒதுக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பதாரியின் அமைச்சின் ஊடாக 2007 ஜீலை 9ஆம் திகதிக்கு முன்னர்,

***Department Of External Resources,***
***Ministry Of Finance and Planning.***

என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்

**ஆஸ்திரேலியாவின் தலைமைத்துவ விருது** (ALA)
*(Australian Leadership Awards)*

இலங்கையிலும் பிராந்தியத்திலும் வளர்ச்சி வெளிப்பாடு மற்றும் சமூக, பொருளாதார கொள்கைச் சீர்த்திருத்தங்களில் செல்வாக்குச் செலுத்தவல்ல தலைமைத்துவ பதவிகளை வகிக்கக் கூடிய திறமையுள்ளவர்களுக்கே இந்த புலமைப்பரிசில்கள். **ALA** புலமைப்பரிசில்கள் முதுமாணி மற்றும் கலாநிதி மட்ட கற்கைகளுக்கு மட்டுமே உரித்தானவை. அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் இருசாராரும் விண்ணப்பிக்கலாம். வெற்றிபெறும் விண்ணப்பதாரிகள் தனித்துவமான தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டமொன்றில் பங்கேற்பவராவார்.

ஆஸ்திரேலிய பல்கலைக்கழகமொன்றினால் நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக்கொள்ள இணங்கப்படுபவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப தாரிகள் சிறப்புமிக்க பட்டதாரி மாணவர்களாகவும் பட்டப்பின்படிப்பில் கல்வித்துறை சாதனையாளர்களாகவும் இருந்திருக்கவேண்டும். ஆங்கில மொழியில் உயர்மட்ட திறமை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். [குறைந்தபட்சம் 6.5 **IELTS** அல்லது அதற்கு சமமான தகுதி]

**ALAS** குறித்த விசாரணைகளுக்கு **<ala@ausaid.gov.au>** என்ற முகவரி யில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பங்களை **<www.australian scholarships.gov.au>** நேரடியாக 31 - ஜூலை 2007 இற்கு முன்னர் அல்லது 16 ஜூலை 2007 இற்கு முன்னர் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

***Scholarships Officer,***
***Australian High Commission,***
***21, Gregory's Rd, Colombo - 07, Sri Lanka.***

**Endeavour Programme** - இலங்கை பிரஜைகளுக்கு பல்வேறு முனைப்புத் திட்டங்களின் கீழ் விருதுகள் உண்டு.

அவைகளாவன:- முனைப்புபட்டப்பின் படிப்பு விருதுகள், முனைப்பு ஆராய்ச்சி பெலோஷிப்ஸ், முனைப்பு நிறைவேற்றுநர் விருதுகள், முனைப்பு சர்வதேச பட்டப்பின் ஆராய்ச்சி விருதுகள், மற்றும் முனைப்பு **VET** விருதுகள்.

இவ்வகை விருதுகள் விவரங்களை பின்வரும் முகவரியில் பெறலாம்.

**<www.australian scholarships.gov.au>**

ஆஸ்திரேலிய புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பதாரிகளுக்கு தகவல் தரும் அரங்கு ஒன்று கொழும்பு ஹில்ரன் பிளேஸிலுள்ள ஆஸ்திரேலிய ஸ்தானிகர் பணிமனையில் [வாசஸ்தலத்தில்] (JAIC) 2007 மே 18 ஆம் திகதி 10 மணியிலிருந்து 12 மணி வரை நடைபெறும்.

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

அமரர்

## சின்னத்துரை புவிராசா (புவி)

(சியான் ரேடர்ஸ் உரிமையாளர் - அச்சுவேலி
கராத்தே பயிற்சி ஆசிரியர் 3rd Dane)

தாயின் மடியில்
22★03★1971

இறைவன் அடியில்
26★05★2006



கண்ணிமை பொழுதினிலே பிரிந்தவரே!
எண்ணவில்லை ஒருபோதும் உம் பிரிவை
மண்ணுலகம் எங்கும் உம் புகழே
விண்ணுலகம் சென்றதேனோ நம்மைவிட்டே!
அன்பினதும் பண்பினதும் இருப்பிடமே
உதவும் கரம் கொண்ட உத்தமரே!
வீரக்கலை பயின்று சிறந்தவரே
பாரும் புகழ்ந்து நின்ற பெரியோனே
உன் பெற்ற தாயும் சுருண்டு கிடக்குதையா!
உன் மனையாளின் மனமும் ஏங்கித் தவிக்குதையா!
உன் புதல்வர்களும் உன் முகம் காண ஏங்குதையா!
உன் உடன் பிறந்தாரும் சுற்றத்தாரும்
உன்னை நினைந்து சிறகு உடைந்த பறவை போல்
உன் பிரிவை நினைத்து இப்புவியில் - புவியின்
ஓராண்டு நினைவே இது.

**அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

(60510)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை 'கொங்கிறீட்' வீதிகளாக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே16

எதிர்காலத்தில் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட தார் வீதிகள் சீமெந்து - கல்லு கலவையிலான 'கொங்கிறீட்' வீதிகளாக அமைக்கப்படவுள்ளன.

மேற்படி கொங்கீறீட் வீதி அமைப்பது தொடர்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபை செயலாளர்களுக்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்குமான விசேட விளக்கம் கூட்டம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபைக்குட்பட்ட ஒரு கிலோ மீற்றர் தூரம் அளவிலான வீதி அமைக்க 10 மில்லியன் ரூபா செலவாகும் என இக் கூட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

(203-95)

# செம்மணியில் தொடர்ந்தும் மணல் திருட்டு வயல் நிலங்கள் பெரிதும் பாதிப்பு

நல்லூர்,மே16

செம்மணிப் பிரதேசத்தில் தொடர்ந் தும் மணல் திருட்டு இடம்பெற்று வருவதாகப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் வயல்நிலங் களில் திருட்டுத்தனமாக மணல் அகழும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் முறையிட்டும் எந்த வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை என்றும் -

இந்த மணல் திருட்டால் வயல் நிலங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(202-111)

# பதினேழு வருடங்கள் கடந்தபோதும் நிவாரணத் தொகையில் மாற்றமில்லை

## வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் விசனம்

யாழ்ப்பாணம்,மே16

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு இடம்பெயர்ந்த ஆரம்பகாலத்தில் - 1990 ஆம் ஆண்டு நிவாரணத் தொகைக்கே தற்போது நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

இது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் கஷ்டங்களுக்கு உள்ளாக்குகின்றது என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகவும் தமது பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டதன் காரணமாகவும் இடம்பெயர்ந்த மக்கள் 17 வருடங்களுக்கு மேலாக பல்வேறு பிரதேசங்களிலேயே வசித்துவருகின் றனர்.

இடம்பெயர்ந்த 6ஆம் மாதத்திலிருந்து நிவாரணத்துக்கு உலர் உணவு வழங்கப்பட்டு வருகின்றது. அக்காலத்தில் 5 பேருக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு ஆயிரத்து 260 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. விலைவாசி 3 மடங்கு அதிகரித்துள்ள இன்றைய கால கட்டத்திலும் அதே தொகைக்கே நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இந்த விடயத்தைஅதிகாரிகள் கவனத்தில் எடுத்து உரிய தீர்வைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க உடன் முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

(202)

| அன்றைய விலை | | | இன்றைய விலை | | |
|---|---|---|---|---|---|
| பொருள் | நிறை | விலை | பொருள் | நிறை | விலை |
| குத்தரிசி | 1 Kg | 12.50 | வெள்ளை அரிசி | 1 Kg | 48.00 |
| மா | 1 Kg | 12.00 | மா | 1 Kg | 48.00 |
| சீனி | 1 Kg | 22.00 | சீனி | 1 Kg | 70.00 |
| பருப்பு | 1 Kg | 32.00 | பருப்பு | 1 Kg | 73.00 |
| லக்ஸ்பிறே | 1 பை | 55.00 | லக்ஸ்பிறே | 1 பை | 176.00 |

# கூ.சங்கப் பணியாளருக்கு சம்பள உயர்வு

வலி.தென்மேற்கு,மே16

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு 2006 டிசெம்பர் மாதம் வெளியிட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இச்சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது என கூறப்பட்டுள்ளது.

(203-135)

# மானிப்பாய் பிரதேசத்தில் நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து

நவாலி,மே16

மானிப்பாய் பிரதேசத்தில் நாளை 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்து ஏற்றப்படுமென்று சுகாதாரப் பிரிவினரால் அறிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய நாளை காலை 8.30 மணி முதல் உடுவில் றோட், மொமோறியல் வீதி உச்சி ஒடைமுகாம் மருத்துவமனை வீதி, பிரதேச சபை அலுவலகம் ஆகிய இடங்களிலும் -

18ஆம் திகதி பட்டின சபை வீதி, இந்துக் கல்லூரி முன்பாக சங்கரப்பிள்ளை வீதி, செல்லமுத்து விளையாட்டு மைதானம், சோதிவேம்படி ஆகிய இடங்களிலும் -

19ஆம் திகதி பொன்னாலை வீதி, வள்ளுவர் வீதி, டச்சு வீதி, சமுர்த்தி வங்கியிலும் -

21ஆம் திகதி பிப்பிலி முகாம் கட்டுடை கிராமசேவகர் அலவலகம், கட்டுடை நூறு வீட்டுத் திட்டம், கட்டுடை அரசடி சேமன் காமம் ஆகிய பகுதிகளில் வைத்து நடமாடும் சேவைமூலம் விலங்குகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(203-100)

# மதகு சேதம்

யாழ்ப்பாணம்,மே16

ஏ-9 பிரதான வீதியில் நாவற்குழிப் பாலத்திற்கு அருகில் உள்ள தண்ணீர் பாயும் மதகுகள் சேதமடைந்துள்ளதால் விபத்துகள் ஏற்படும் அபாயநிலைமை தோன்றியுள்ளது.

போக்குவரத்துக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த தூண்களும் சேதமடைந்து காணப்படுகின்றன. இவற்றுக்குப் பதிலாகத் தடிகள் போடப்பட்டுள்ளன.

இதனை உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

(203)

# வலி.தென்மேற்கில் பரவிவரும் ஆடுகளுக்கான நோயைக் கட்டுப்படுத்த அறிவுறுத்து

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஆடுகளுக்கு ஒருவகையான ஏற்பு நோய் பரவி வருகின்றது எனவே அதனைத் தடுக்கும் நோக்கில் ஆடுகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றுமாறு சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் அமுதா பிரபாகரன் அறிவித்துள்ளார்.

ஆடுகளை ஏற்பு நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்காக மறி ஆடுகள் சினைப்பட்டிருப்பின் மூன்றரை அல்லது 4 மாதங்களுக்கு முன்னரும் அல்லது குட்டி ஈன்றவுடனும் சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தடுப்பூசியைப் போடுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

ஆடுகளுக்கு பூச்சிமருந்து, தெள்ளுகளை அழிக்கும் மருந்து ஆகியனவும் வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரி வித்தார்.

(202-135)

# முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மே16

மீசாலை குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் மென்வன்மைப் போட்டிகள் கடந்த வாரம் அல்லாரை அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

அல்லாரை அ.த.க. பாடசாலை உப அதிபர் க.சிவபாதசுதந்தரம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு சேவாலங்கா மன்ற யாழ்ப்பாணப் பணிப்பாளர் வி.கேசவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(203-207)

# திணைக்களங்களின் கட்டட வேலைக்கு மரங்களைப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

## அரச மரக் கூட்டுத்தாபன முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், மே16

கட்டட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் அரச திணைக்களங்களுக்குத் தேவையான மரங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று யாழ்.அரச மரக் கூட்டுத்தாபன மாகாண முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

குடாநாட்டில் அரசாங்கத் திணைக்களங்கள் கட்டட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும்போது தேவையான மரங்களின் பட்டியலை உரிய காலத்தில் வழங்கினால் அதனை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவித்து வழங்கமுடியும் - என்றார் முகாமையாளர்

யாழ்.குடாநாட்டில் உள்ள அரசாங்க திணைக்களங்கள் தற்போது நிர்மாண வேலைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(203-95)

# தேவையான அளவு சதுரக்கோடு கொப்பிகள் கையிருப்பில் உண்டு

யாழ்ப்பாணம்,மே16

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தில் தேவையான அளவு சதுரக்கோடுக் கொப்பிகள் உள்ளன என்று பொதுமுகாமையாளர் செல்வி பேரம்பலம் தெரிவித்துள்ளார்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் அவை விநியோகம் செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உதயனில் நேற்றுமுன்தினம் சதுரக்கோடு கொப்பிகளுக்குத் தட்டுப்பாடு என வெளியான செய்தியை அடுத்தே அவர் மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளார்.

(203)

# தென்மராட்சி மக்களை கடந்த வாரம் உலுக்கிச் சென்றது 'மினி' சூறாவளி

## பொதுச் சொத்துகள் பெருமளவில் சேதம்

கடந்த வாரம் திடீர் என உலுக்கிய காற்றுடன் கூடிய மழையும் இடி மின்னலும் பொதுமக்களை பெரும் பீதிக்குள் தள்ளிவிட்டன. யாழ். குடாவை உலுக்கிய மின்னலுடன் கூடிய மழை தென்மராட்சியில் திடீர் என பெரும் இரைச்சலுடன் கூடிய மினி சூறாவளியாக வியாபித்தது. இந்தச் சூறாவளி தென்மராட்சியில் சாவக்சேரி நகரம் உட்பட மீசாலை, கல்வயல், மட்டுவில் சங்கத்தானை, நுணாவில், அல்லாரை போன்ற கிராமங்களை ஒரு கணம் உலுப்பியது.

### பயன்தரு மரங்கள் முறிவு

இவ்வாறு வீசிய வேகமான காற்றினால் பயன்தரு மரங்கள் பல முறிந்தன. முருங்கை மரங்கள், பலாமரங்கள், மா மரங்கள், வாழைகள் போன்றவையும் பனை, தென்னை, மரங்களும் முறிந்தன. இதனால் பொதுமக்கள் பல இடையூறுகளை எதிர்கொண்டனர். வீதிகள் தடைப்பட்டன.

காற்றுப் பலமாக வீசியதன் காரணமாக தற்பொழுது தென்மராட்சியில் பலாப்பழம், மாம்பழம் ஆகியவற்றின் சீசன் காலமாகும். பல பலாக்காய்கள், மாங்காய்கள் இடுங்குப்பட்டு வீழ்ந்து சேதமாகின. இதனால் பொதுமக்களது வருமானங்கள் வீணாக்கப்பட்டது. காற்றினால் மரங்களில் இருந்து வீழ்ந்த பலாக்காய்கள் மாடுகள், ஆடுகளுக்கு தீவனமாக மாறின.

### மின் துண்டிப்பு

கடும் காற்றுக்காரணமாக முறிந்து வீழ்ந்த மரங்கள் மின்மார்க்க கம்பிகள் மீது வீழ்ந்தன. இதனால் மின்மார்க்கக் கம்பிகள் அறுந்ததுடன் மின்துண்டிப்பு ஏற்பட்டது. தென்மராட்சியில் சாவச்சேரி மின்சாரசபைப் பகுதியில் பல இடங்களில் மின்சாரக்கம்பிகள் அறுந்தன. இதனைச் சீர்செய்ய மின்சார சபை ஊழியர்கள் பல கஷ்டங்களை அனுபவித்தனர்.



### இடிமின்னலும் மழையும்

கடந்த 5ஆம் திகதி இடம்பெறற இடிமின்லும் மழையும் போன்றதொரு சம்பவம் இதுவரை இடம்பெற்றது இல்லை என்று பலரும் தெரிவித்தனர். இடி மின்னல் அதனுடன் கூடிய இடிமுழக்கம் ஆகியன நில அதிர்வு போன்று நெஞ்சை உலுக்குவது போன்று உணரமுடிந்தது. பலரும் என்ன செய்வது என அறியாது திணறினர். குழந்தைகள் செய்வதறியாது விழித்தனர் ... இருதய நோயாளர்கள் பாதிப் படைந்தனர். வீடுகளில் மக்கள் பலர் அன்றிரவு இறைவழி பாட்டில் நேரத்தைக் கழித்தனர். தேவார திருவாசகங்கள் கூட ஓதப்பட்டதாகத் தெரிவித்தனர்.

### சூறாவளியால் ஏற்பட்ட சேதங்கள்

தென்மராட்சியில் ஏற்பட்ட சூறாவளியால் சுமார் 15 கிராம சேவையாளர்கள் பிரிவில் 114 வீடுகள் பலத்த சேத மடைந்துள்ளதாக செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 20 இற்கு மேற்பட்ட ஏக்கர் காணிகளில் பயிரிடப் பட்டிருந்த வாழைமரங்கள் அழிந்து சேத மடைந்துள்ளன.

கைதடி தெற்கு, கைதடி தென்கிழக்கு, நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு கோயிலாக்கண்டி, கைதடி நுணாவில், கோயில் குடியிருப்பு, மட்டுவில் வடக்கு, மீசாலை வடக்கு, மீசாலை மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வீடுகள் சேதமடைந்துள்ளன.

### செய்தி மடல்

கைதடி வடக்கு, கைதடிமத்தி, கைதடி மேற்கு தென் மட்டுவில், மட்டுவில், நுணாவில், சரசாலை வடக்கு, மீசாலை வடக்கு, மட்டுவில் வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழைத் தோட்டங்கள் அழிவுக்குட்பட்டன.

### காயமடைந்த பொதுமக்கள்

சூறாவளியால் 6 பொதுமக்கள் காயமடைந்தனர். மீசாலை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 4 பொதுமக்களும் தென் மட்டுவில் கிராம அலுவலர் பிரிவில் 2 பேரும் காயமடைந்தனர். காயமடைந்த பொதுமக்கள் சிகிச்சைக்காக சாவக்சேரி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இயன்றளவு நிவாரணம் பெற அரச அதிகாரிகள் தமது பணிகளை மேற்கொள்ளவேண்டும் என பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

- அருணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

சரவணையைச் சேர்ந்த
**சிவநேசன் - ஜெயாராணி**
தம்பதியரின் செல்வப்புதல்வன்
**பிரணவன்**
தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (16.05.2007) புதன்கிழமை வெகு
விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா,
அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார்,
பெரியம்மாமார், சித்தப்பாமார், அத்தை,
மாமன்மார், மாமிமார், அக்காமார்,
அண்ணாமார், தம்பி, மச்சான்மார், மச்சாள்மார்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி முருகன்
திருவருளால் சகல செல்வங்களும் பெற்று
பல்லாண்டுகாலம் வாழ்கவென
வாழ்த்துகிறார்கள்.

16 . 05 . 2007



பிரணவன்

சரவணை கிழக்கு,
வேலணை.

**குடும்பத்தினர்.**

# 9ஆம் நாள் நினைவஞ்சலியும் இறைவழிபாட்டு அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 15 - 06 - 1922



ஆண்டவன் அடியில் 08 - 05 - 2007

## அமரர் கபிரியேல் அருளப்பு

*(ஓய்வுபெற்ற யாழ்.மாநகர சபை மின்சாரப் பகுதி ஊழியர்)*

08.05.2007 செவ்வாய்க்கிழமை எமது குடும்பத்தலைவன் கர்த்தருக்குள் நித்திரையடைந்த செய்தியறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல்கூறியோருக்கும் அனுதாபத்தை தெரிவித்தோருக்கும் இறுதி ஆராதனையை நடத்தியோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிசெய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (16.05.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் நித்திய பேரின்ப வாழ்வுக்கான இறைவழிபாட்டிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.05, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (60652)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

# காணி விற்பனைக்கு

மல்லாகத்தில், கே.கே.எஸ் வீதிக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 242198

(60536)


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021 222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee 2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee 3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System (Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System (Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX
Course Fee 2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 21/05/2007- 09.00

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 18/05/2007, 19/05/2007 20/05/2007, 23/05/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
Phone : 021 222 8250, 0777 222 422


அலுவலக ஊழியர்களிற்கான நன்மைகருதி விடுமுறைகால (சனி - ஞாயிறு) ஒருமாதகால விசேடவகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது.

| | |
|---|---|
| Diploma in Microsoft Office | 1000/= |
| Diploma in Desktop Publishing | ~~2000/=~~ 1450/= |
| Diploma in Computerized Accounting | ~~5000/=~~ 3500/= |
| Diploma in Hardware Engineering | ~~2000/=~~ 1450/= |
| Diploma in Video Editing | ~~4000/=~~ 3000/= |
| Diploma in Graphic Designing | ~~2000/=~~ 1650/= |
| Diploma in AutoCAD | ~~2000/=~~ 1450/= |

வகுப்புக்கள் ஆரம்பம் : 19/05/2007


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 - 10 - 1938



ஆண்டவன் அடியில் 16 - 04 - 2007

அமரர்
## குருநாதபிள்ளை சிவப்பிரகாசம்

அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
எம் குடும்பத்தின் குலவிளக்கே!
உம் இனிய வதனமும் நினைவுகளும்
எம்மை விட்டு என்றும் நீங்காதய்யா!

*பிள்ளையார் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.*

என்றும் உம் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

(60526)


# ஈராண்டு நினைவலைகள்

## அமரர் முத்து கதிரமலை
## (செல்லக்கிளி)

*(கிருபா கிரேசர் உரிமையாளர், வல்லை - அச்சுவேலி)*

மலர்வு 19.07.1952 உதிர்வு 06.06.2005

திதி: அமாவாசை 16.05.2007



குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழி நடத்தி
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத் தெய்வமே
அகிலத்தில் ஆறாத் துயரமதில்
எம்மை ஆழ்த்திவிட்டு
மறைந்ததேனோ?

அன்பைச் சொரிந்து
பண்பை வளர்த்து
முயற்சி எனும் காற்றை
முழு நாளும் சுவாசித்து
உலகில் நாமுயர
உற்ற வழி காட்டிய
எம் அன்புத் தெய்வத்தை
இந்நாளில் அல்ல
எந் நாளும் மறவோமே
ஈராண்டு போனாலும் ஆறவில்லை
எம்துயரம்
கண் அயர்ந்து போனாலும்
கலையவில்லை உம்முகம்
ஆண்டவனின் வருகையில்
ஆதவன் போல் பிரகாசித்து
எழும்புவீரென
ஆவலுடன் எதிர்பார்க்கும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*விளையாட்டரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

**உம் மனைவி,**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசியல் நோக்கங்களுக்காக அவசர மீள் குடியேற்றம்

கிழக்கில் பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டு, லட்சக்கணக்கானோரை நாட்டுக்குள்ளேயே இடம்பெயர வைத்து, மனிதப் பேரவல அனர்த்தத்தை ஏற்படுத்திய கொழும்பு அரசு, அந்தச் செயற்பாட்டின் மூலோபாயமாக இருக்கும் தனது தந்திரத் திட்டத்தின் அடுத்த கட்ட செயற்பாடுகளை - காய்நகர்த்தல்களை - உடனடியாகவே ஆரம்பித்து விட்டது.

அண்மைக்காலத்தில் கிழக்கிலங்கையில் அரசுப் படைகள் மேற்கொண்ட பெரும் - தொடர் - இராணுவ நடவடிக்கைகளினால் சுமார் இரண்டு லட்சம் தமிழர்கள் தமது வீடு, வாசல்கள், நிலபுலன்கள், உடைமைகள், சொத்துக்களைக் கைவிட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்தனர்.

நலனோம்பு மையங்கள் என்ற பெயரில் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் கூட்டம் கூட்டமாகத் தங்கவைக்கப்பட்டிருக்கும் இந்த மக்களை மீண்டும் அவர்களது இடங்களுக்கு 'விரட்டியடிக்கும் பணி' ஆரம்பமாகிவிட்டது.

கிழக்கில் படையினரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்று ஐ. நா. அமைப்புகள் உட்பட உதவி நிறுவனங்கள் விடுத்த எச்சரிக்கையையும் புறக்கணித்துவிட்டு - மீறி - மீள்குடியமர்வு நடவடிக்கையை அரசு ஆரம்பித்து விட்டது.

இந்தப் பகுதியில் சுமார் ஒரு லட்சம் மக்கள் தமது பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தை எதிர்கொண்டுள்ளதாக உதவி நிறுவனங்கள் தமது அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

''பாதுகாப்பும், கண்ணியமும், கௌரவ வாழ்வும் உறுதிப்படுத்தப்படாத சூழ்நிலையில் மக்களை மீளக் குடியமர்த்தத் திட்டமிடப்படுவது மனிதாபிமான சமூகத்திற்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது'' - என்று ஐ. நா. அமைப்புகளையும் உள்ளடக்கிய உதவி நிறுவனங்களின் குழு தனது அறிக்கையில் கவலை தெரிவித்திருக்கின்றது.

மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பக்கூடியளவுக்கு [illegible]லைமை முன்னேற்றமடையவில்லை என்பதையும் அது கவலையோடும், விசனத்தோடும் சுட்டிக்காட்டியுமிருக்கின்றது.

ஆனால் உதவி அமைப்புகளின் இந்த எச்சரிக்கை மற்றும் கவலையைப் புறக்கணித்துவிட்டு, ஏற்கனவே வகுக்கப்பட்ட தனது திட்டப்படி காய்களை நகர்த்தத் தொடங்கி விட்டது கொழும்பு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோயில்போரதீவு, புன்னைக்குளம் ஆகிய இரு கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த - 3 ஆயிரத்து 520 பேரைக் கொண்ட - 937 குடும்பங்கள் அவர்களது மூடை முடிச்சுகளுடன் கடந்த திங்களன்று தமது சொந்த இடங்களுக்கு பஸ்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

தினசரி 3,000 பேரையாவது - எப்பாடுபட்டேனும் கொண்டுபோய் - மீளக்குடியமர்த்தவேண்டும் என்ற இலக்கை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்குக் கொழும்புத் தலைமை விதித்திருக்கின்றது எனத் தகவல்.

இதற்காகத் தேவையான பஸ்கள் உட்பட ஆளணி அம்புகளோடும் உரிய பணிப்புரைகளோடும் சம்பந்தப்பட்ட உயர்மட்டக் குழுவினர் களத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என்றும் பேச்சு.

கொழும்பு வாயால் இட்ட பணியை சிரசில் ஏற்றுச் [illegible]மந்து நிறைவேற்றிக் காட்டும் சூளுரையோடு - எஜமான் விசுவாசத்தோடு - உயர்தரப்புக் குழுவினர் கிழக்கில் முகாமிட்டிருக்கின்றனர் என்றும் தகவல்.

இரண்டு மாதங்களுக்குள் முழுப்பேரையும் மீளக்குடியமர்த்திவிட வேண்டும் என்ற காலக்கெடு அவர்களுக்கு விதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி.

ஏற்கனவே கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் விருப்புக்கும், இசைவுக்கும் மாறாக - பலவந்தப்படுத்தி - அச்சுறுத்திக் கட்டாயப்படுத்தி - மீளக்குடியேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக ஐ. நா. மட்டத்தில் சர்வதேசக் கண்டனக் குரல்கள் எழுந்தமை எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

இப்படியெல்லாம் நெருக்கடிகள் இருக்கத்தக்கதாக, ஏன் இந்த மக்களை இவ்வளவு அவசரப்பட்டு மீளக்குடியேற்ற கொழும்பு அரசு துடியாய்த் துடிக்கின்றது?

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் எண்ணத்தைப் புறமொதுக்கி, போரியல் போக்கில் இராணுவத் தீர்வு காணும் ஒரே முனைப்பில் மூர்க்கத்தோடு நிற்கும் கொழும்பு அரசுக்கு இவ்விவகாரத்தில் ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல் இருக்கின்றது. தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்குடைய மேலாண்மைவாதிகளைத் திருப்திப்படுத்தி - அவர்கள் விரும்பியதை ஒப்பேற்றி - அத்தரப்பின் முழு ஆதரவைத் தக்கவைக்கும் இலக்கோடு வகுக்கப்பட்டதே அந்த நிகழ்ச்சித் திட்டம்.

அந்த நிகழ்ச்சிநிரலின்படி விடயங்கள் அரங்கேற்றப்படுகின்றன. அவ்வளவே.

கிழக்கில் புலிகளைப் பலவீனப்படுத்தி, அப்புறப்படுத்தி விட்டு ஒரு தேர்தலை அங்கு நடத்தி, அதன் வாயிலாக தமிழர் தாயகமான வடக்கையும், கிழக்கையும் துண்டாடுவதை நிரந்தரமாக உறுதிப்படுத்துவதும், கிழக்கு மாகாண சபையை - தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுவோர் மூலம் - இயக்கிக்காட்ட நடவடிக்கை எடுப்பதும் இந்தத் தந்திரோபாயத் திட்டத்தின் அங்கங்கள்.

லட்சக்கணக்கானோர் உள்நாட்டில், இடம்பெயர்ந்திருக்கையில், ஒரு தேர்தலை நடத்தினால், எடுத்த எடுப்பிலேயே அதை வெறும் செப்படி வித்தை என்று கூறி சர்வதேசம் புறக்கணித்துவிடும் என்பது கொழும்புத் தலைமைக்கு நன்கு தெரியும். அதைச் சமாளிக்கவே அவசர அவசரமாக - மக்களின் பாதுகாப்பைக் கணக்கில் எடுக்காமல் - அகதிகளை அள்ளிக்கொண்டுபோய் இறக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

கொழும்பைத் திருப்திப்படுத்தி தங்களின் அரசியல் இருப்பையும் பதவிகளையும் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பும் சில அரசியல் தரப்புகள், இந்தச் சதித் திட்டத்துக்கு முழு அளவில் துணைபோவது தமிழர்களின் மனதை நோகடிக்கும் - வேதனைப்படுத்தும் - செயலாகும்.

அகதிகள் நலனில் அரசியலையும் குறுகிய இனவாதப் போக்கையும் புறக்கணித்து நியாயத்துடன் செயற்பட சகல தரப்புகளும் முன்வருவது அவசியமாகும். அதுவே நீதியுமாகும்.

# ஆள்கொணர்வு வழக்குகள் யாழ்.நீதிமன்றில் நேற்றும் விசாரணை

## ராஜபக்ஷவும் ஆஜர் செய்யப்பட்டார்

யாழ்ப்பாணம், மே16

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி படுகொலை வழக்கின் மரண தண்டனைக் கைதியான கோப்ரல் ராஜபக்ஷ நேற்றும் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

95-96 காலப் பகுதியில் செம்மணிப் பகுதியில் காணாமற்போனோர் தொடர்பான ஆள்கொணர்வு வழக்குகளின் விசாரணைக்காகவே அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

ஐந்து ஆள்கொணர்வு வழக்குகள் நேற்று யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

அந்த வழக்குகளை நடத்துவதற்கு சாட்சிகள் சமுகமளிக்கவில்லை என்றும், வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படியும் அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.றெமேடியஸ் கோரினார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் வழக்குகளின் விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும் ஐந்து ஆள் கொணர்வு வழக்குகள் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

அந்த வழக்குகளிலும் கோப்ரல் ராஜபக்ஷ ஆஜர் செய்யப்பட்டார்.

அந்த வழக்குகளில் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் சமுகமளிக்காததால் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. (அ-1-203)

# யாழ்.பல்கலை. பாதுகாப்பு ஊழியர்கள் வளாகத்துக்குள் கவனயீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே16

யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பல்கலைக்கழக வளாகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த சில மாதங்களாக எதிர்நோக்கி வரும் உயிர் ஆபத்து நிறைந்த பணி நிலைமை, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவுமுதல் வளாகத்தினுள் காணப்பட்ட அச்சுறுத்தல் பிரசுரம் போன்ற விடயங்களை சுட்டிக்காட்டியும் -

கடந்த 6ஆம் திகதி பின்னிரவு வேளையில் மற்றொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டமையால் அவர் உள ரீதியான பாதிப்புக்கு உள்ளாகியமை போன்ற விடயங்களைச் சுட்டிக் காட்டியும் இப் போராட்டம் நடத்தப்பட்டது.

பல்வேறு சுலோகங்களைக் கொண்ட பதாகைகளுடன் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பதில் துணைவேந்தருக்கு ஊழியர் சங்கத்தினால் கடிதம் ஒன்றும் வழங்கப்பட்டது.(அ-1-203-68)

**உதயன் செய்திக்கு கைமேற்பலன்**

# தம்பாலை வீடமைப்புத் திட்டத்தில் 70 குடும்பங்களை மீள்குடியமர்த்த முடிவு

யாழ்ப்பாணம், மே 16

வலி.வடக்கில் இருந்து 90ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வடமராட்சி கரையோரப் பகுதியில் தங்கியிருக்கும் குடும்பங்கள் தம்பாலை, கற்றாடிவெளியில் அமைக்கப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப்பட உள்ளனர்.

தம்பாலைப் பகுதியில் வீடுகள் அமைக்கப்பட்டிருந்தும், மக்கள் குடியமர்தப்படவில்லை என்று உதயனில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து யாழ்.செயலகத்தில் அதுகுறித்து ஆராய்வதற்கான கூட்டம் நேற்று நடத்தப்பட்டது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆழிப்பேரலை மறுசீரமைப்பு மேலதிக அரச அதிபர் எஸ்.செந்தில்நந்தனன், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் சி.தவரத்தினம், ஐ.ஓ.எம். நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதுவரை பூர்த்தியாகியுள்ள 70 வீடுகளில் மக்களைக் குடியமர்த்துவது என்று இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தம்பாலைப் பகுதியில் 500 வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்து. (அ-1-111)

# வரதரின் நினைவுகூர் விழாவில் அவரது 4 நூல்கள் வெளியிடப்படும்

சுழிபுரம்,மே 16

மூதறிஞர், மூத்தபடைப்பாளி, சாகித்தியரத்தினம் வரதரின் நினைவுகூர் அஞ்சலி ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

எழுத்தாளர் செங்கைஆழியான் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், வரதர் அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் வரதர் நினைவுமலர் வெளியீடும் வரதரின் நிறைவுகால நூல்களான யாழ்ப்பாண தேசம், கிரண்பேடி, மனிதர்களின் தேவைகள், பூதத்தம்பி ஆகிய நூல்களும் வெளியிடப்படவுள்ளன. இந்த நான்கு நூல்களும் விழா மண்டபத்தில் 120 ரூபாவுக்கு வழங்கப்படும்.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் மதிப்புரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்துவர்.

யாழ்.இலக்கிய வட்டம் இந்த நினைவுகூர் விழாவினை ஏற்பாடு செய்துள்ளது. (அ-28-203)

# நேர்முகப் பரீட்சைக்கு 12 மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே 16

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலப் பாடநெறி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைக்கு 12 மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட மாணவர்களை எதிர்வரும் சனிக்கிழமை காலை உரிய ஆவணங்களுடன் கல்லூரிக்கு சமுகம் தருமாறு கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

கே.வேணுகா (யாழ்ப்பாணம்), கே.சிவராசா (தும்பளை), எஸ்.கவிதா (நீர்வேலி மேற்கு), கே.சுகாசினி (சாவகச்சேரி), எஸ்.துஸ்யந்தி (புலோலி தெற்கு), ஜே.நிரோசன் (வட்டுக்கோட்டை), ரி.கௌசல்யா (சுண்டுக்குளி), பி.அநித்தா (யாழ்ப்பாணம்), எஸ்.யாழினி (கரவெட்டி வடக்கு), சி.தர்சனா (கொக்குவில் மேற்கு), ஜெ.பிரதீபா (ஆனைக்கோட்டை), பி.பிரசாந்தினி (உடுவில் தெற்கு). (1-202-68)

# கப்பல் பயணிகள் நேற்று தெல்லிப்பழையுடன் திரும்பினர்

யாழ்ப்பாணம், மே 16

திருகோணமலைக்கான கப்பல் பயணத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தெல்லிப்பழையுடன் திரும்பிவந்தனர்.

திருகோணமலைக்குச் செல்வதற்காக 350 பயணிகள் பஸ்கள் மூலம் தெல்லிப்பழைக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடும் காற்றுக் காரணமாக கப்பல் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து பயணிகள் ஏமாற்றத்துடன் யாழ்ப்பாணத்திற்கு நேற்று நண்பகல் 1.30 மணியளவில் திரும்பி வந்து சேர்ந்தனர்.

ரத்துச் செய்யப்பட்ட கப்பற்சேவை இன்று புதன்கிழமை இடம்பெறக்கூடும் என்று யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார். ஆயினும் உறுதியான தகவல் நேற்றிரவுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் சொன்னார். (அ-1-202-160)

# உப்பு விலை உயர்ந்தது

யாழ்.மாவட்டத்தில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

உப்புக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைத் தொடர்ந்து வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ உப்பு 60 ரூபா தொடக்கம் 70 ரூபா வரை விற்கப்படுகிறது. இதற்கு முன்னர் ஒரு கிலோ உப்பு 20 ரூபாவுக்கு விற்பனையாகியது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் உப்பு அதிகரித்த விலையில் விற்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (1-207)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 3 | வியாழக்கிழமை 17.05.2007 |
| திதி: பிரதமை | முன்னிரவு : 11.31 |
| நட்சத்திரம்: | கார்த்திகை பிற்பகல் : 03.50 |
| சுபநேரம் | : 07.23 - 08.53 |
| ராகுகாலம் | : 01.23 - 02.53 |

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் பெரியபுராண உரை

வடமராட்சி,மே 16

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் வாராந்த ஆத்மீக நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'பெரிய புராணம்' தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் இரா.குமாரவடிவேல் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (203-160)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 16

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (203-207)

* * *

சுழிபுரம், மே 16

சுழிபுரம், பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் நண்பகல் கந்தரனுபூதி மனனப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம், மே 16

நயினை தில்லைவெளி பிடாரி அம்பாள் ஆலய திருக்குளிர்த்திப் பொங்கல் வேள்வி அடுத்த மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று காலை ஏழு மணிக்கு பொங்கலுக்கான விநாயகப்பானை வைத்தலுடன் வேள்வி ஆரம்பமாகி இரவு பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல், கும்பஸ்தாபனம், சுவாமி எழுந்தருளல் என்பன இடம்பெறும்.

# இளைஞனின் சடலத்தை அடையாளம் காணக் கோருகின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம்,மே 16

இருபாலை வி.எச்.எஸ்.வீதியில் கடந்த சனிக்கிழமை சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோப்பாய் பொலிஸார் கேட்டுள்ளனர்.

25 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட, கறுப்பு நிறக் காற்சட்டை அணிந்திருந்த இந்த இளைஞனின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. உறவினர்கள் சடலத்தை இனங்காண உதவுமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (அ-1)

# வவுனியா வளாகத்தில் 21ஆம் திகதி முதல் கல்வி டிப்ளோமா பரீட்சை

வவுனியா, மே 16

யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் வவுனியா வளாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா முதலாம் அரையாண்டு பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நேற்று முதல் வவுனியா வளாக வியாபார கற்கைநெறி பீடாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா இரண்டாம் வருடம் மற்றும் அதற்குரிய மீள் பரீட்சைகள் அடுத்தமாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கந்தசாமி தெரிவித்தார். (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் 'மோட்டோறோலா' சேவையில் 1,200 இணைப்புக்கள் செயலிழந்தன

## இணைப்புக் கோபுரம் காற்றினால் முறிந்து வீழ்ந்ததால்

யாழ்ப்பாணம், மே 16

குடாநாட்டில் ஆயிரத்து 200 'மோட்டோறோலா'' தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்துள்ளன.

'ரெலிக்கொம்' யாழ். அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள 'மோட்டோறோலா' இணைப்புக்களை வழங்கும் கோபுரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் கடும் காற்றால் முறிந்து வீழ்ந்தது.

அதன்காரணமாகவே மேற்படி தொலைபேசி சேவை செயலிழந்துள்ளது.

இது தொடர்பாக ரெலிக்கொம் நிறுவனத்தின் வட பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் வி. யோகேந்திரனிடம் கேட்டபோது -

செயலிழந்துள்ள 'மோட்டோறோலா' தொலைபேசிகளுக்கு பதிலாக - அந்த இணைப்புக்குப் பதிலாக - சி.டி.எம்.ஏ. வசதியை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். கொழும்பில் இருந்து அந்த வகை தொலைபேசிகளை எடுத்துவந்து இணைப்புக்களை வழங்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அந்த முயற்சி பயன் அளிக்காவிட்டால், குடாநாட்டில் உள்ள மற்றைய கோபுரம் ஊடாக இணைப்பை வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

எவ்வாறாயினும் 2, 3 நாள்களில் இந்தச் சேவையை சீராக்க முடியும் என நம்புகிறோம் - என்றார் அவர். (அ-1)

# இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளில் மலேஷியா மத்தியஸ்தம் வகிக்காது

## அந்த நாட்டு நாடாளுமன்றில் தெரிவிப்பு

கோலாலம்பூர், மே 16

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கும் நோக்கம் எதுவும் மலேசியாவிற்குக்கிடையாது என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. அவ்வாறான எந்தவொரு கோரிக்கையும் இலங்கை அரசிடம் இருந்து தமக்குக் கிடைக்கவில்லை என்று உதவி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் மேற்கொண்டுள்ள இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு மத்தியில் தாம் தலைகொடுக்கத் தேவையில்லை என்றும் அஹமட் ஷாபெரி ஷீக் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இணைத் தலைமைகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு மலேசியா தனது ஆதரவை வழங்கி வருகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

செனேற்றர் ரவிச்சந்திரன் நாராயணன் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த நாடாளுமன்ற செயலாளர், ''2002 ஆம் ஆண்டு ஒஸ்லோவின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் சமாதான முயற்சிகள் தொடர்புபட்டிருக்கின்றன'' - என்றார். ''நாங்கள் இராணுவ உதவிகள் எவற்றையும் இலங்கைக்கு வழங்கவில்லை. ஆனாலும் ஆழிப்பேரலை பாதித்த சமயத்தில் மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைத்தோம்'' - எனவும் அவர் தெரிவித்தார்.

செனேற்றர் டடுக் தாஜுல் மட் சயின் கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த அஹமட், விடுதலைப் புலிகளுக்கு மலேஷியர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவே உதவினார்கள் என்பதற்கு எந்த ஒரு தகவலும் தமது அமைச்சிடம் இல்லை என்றார்.

பிலிப்பைன்ஸில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மலேஷியா உதவியது தானே என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், அது அந்த நாட்டு அரசு விடுத்த அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டது - வூவி அமைச்சர் சொன்னார். (சி)

**பெனின்சுலா அக்கடமி**
புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்.
(அரியாலை ச.ச.நிலைய மண்டபம்)

ஆரம்பமாகிவிட்டது A/L - 2009
கணக்கீடு தவா - திங்கள், புதன்கிழமையில்
மு.ப. 6.30 மணிக்கு
விசேட புலமைபரிசில் - T. ஹரிஷான்ந் (B.B.A.)
எம்மிடம் புன்னியாமின் உட்பட பல முன்னணி ஆசிரியர்களின் 150 மேற்பட்ட மாதிரி வினா பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
விசேட புலமைபரிசிலுக்குரியது.
விசேட பரீட்சை வகுப்புகள் 18.05.2007
வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு
ஆரம்பமாகின்றன. (60668)

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதலால் விடுதலைப்புலிகள் பின்வாங்கினர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

சம்பவத்தின் பின்னர் குறித்த பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ரி - 56 ரகத் துப்பாக்கி -01 மற்றும் 11 மிதி வெடிகளையும் படையினர் மீட்டனர் என்றும் ஊடக மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் எந்தவிதத் தகவலையும் வெளியிடவில்லை. (சி)

## இஸ்ரேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமிக்ஞை பெறும் உப கரணம் பொருத்தப்பட்டிருக்கும்.

இந்த ராடர்கள் மூலம் விசேடமாக தாழப் பறக் கும் விமானங்களையும் கண்டறிய முடிவதுடன் நீண்ட தூரத்திற்கும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும். 500 கிலோமீற்றர் தூரத்தை இவற்றால் கண் காணிப்புக்குள் வைத்திருக்க முடியும். அத்துடன் ராட ரால் திரட்டப்படும் தகவல்கள் மத்திய வான் பாது காப்பு கட்டளை அல்லது கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பி வைக்கவும் முடியும்.

தேவையின்றி நுழையும் விமானங்களை இந்த ராடர்கள் மூலம் இலகுவாக இலக்கு வைக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது. இதற்கிடையே, இந்தியக் கடற்படை பாக்கு நீரிணைப் பகுதியில் ஆள்களற்ற கண்காணிப்பு விமானங்கள் (UAV) இரண்டை மேலதிகமாகக் கண்காணிப்புப் பணியில் இந்தியக் கடற்படை ஈடுபடுத்தியுள்ளது.

தற்போது வான் பரப்பைக் கண்காணிப்பதற்கு ரஷ்ய தயாரிப்புக்களான சிறிய ராடர்களையும் இந்தியா அதிக அளவில் பயன்படுத்தி வருகிறது. (சி)

## மேன்முறையீடு செய்தவர்களை சந்திக்குமாறு அறிவுறுத்து

யாழ். பல்கலைழக்கழகத்தில் பணிபுரிவோர் தமது இடமாற்றம் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுக்கு தன் மூலம் மேன்முறையீடு செய்தவர்களை சந்திக்குமாறு வரலாற்றுத்துறைப் பேராசிரியரும், ஆணைக் குழுவின் உறுப்பினருமான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கேட்டுள்ளார்.

மேன்முறையீடு குறித்த பெறுபேற்றை அறிய நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை தமது அலுவலகத்தில் சந்திக்கும்படி அவர் கேட்டுள்ளார். (அ-1)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப் பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் கிளைமோர், கைக்குண்டு, துப்பாக்கிகளை மறைத்து வைத்தல், பயங்கரவாதிகளுக்கு ஆதரவான எழுச்சி நாள்களை கொண்டாடு தல், பஸ் வண்டிக்கு நெருப்பு வைத்தல், பகிஷ்கரிப்பு போராட்டங்களை நடத்துதல் போன்ற தேச விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளீர்கள் -

அப்பாவி பல்கலைக்கழக மாணவர் களினதும் பாடசாலை மாணவர்களினதும் கல்வியை சீரழித்து தமிழ் சமூகத்தின் எதிர்காலத்தை நாசமாக்கிய உங்களுக்கு மரண தண்டனையை தவிர வேறு தண்டனையில்லை. - என்றும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களே! நீங்கள் எங்கள் தேசத்திற்கும் எங்கள் இனத்திற்கும் பெருமை சேர்க்கும் பிரஜைகளாக மிளிருவீர்கள் என எதிர்பார்க்கின்றோம். பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு உங்கள் வாழ்க்கையை அழிக்காதீர்கள். கல்விச்சமூகம்என்றவகையில் சரியான வழிகாட்டிகளாக செயற்படுங்கள். - என்றும் அதில் கோரப்பட்டுள்ளது. (அ)

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

பல்கலைக்கழக சமூகத்திற்கும் பாடசாலை மாணவர்களுக்கும் எதிராக விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் துண்டுப்பிரசுரங்களால் எழுந்துள்ள அச்ச நிலைமை குறித்தும் தளபதிக்கு எடுத்துக் கூறப்பட்டது.

அச்சுறுத்தல் துண்டுப்பிரசுரங்கள்தொடர்பாக யாழ். அரச அதிபர்மற்றும் பல்கலைக் கழக நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளதாக தளபதி அப்போது தெரிவித்தார் என அறிய வந்தது. (அ-1)

## பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு விடுக்கப்பட்ட இறுதி எச்சரிக்கை சுவரொட்டி சம்பந்தமான விவரம் வெளியே தெரிய வந்தது.

இதனால்பயப்பீதியடைந்த மாணவர்கள்உடனடியாகதமது விரிவுரை வகுப்புக்களை பகிஷ்கரித்து தமது பாதுகாப்புக்காக பல்கலைக் கழக வளாகத்திற்கு வருவதையும் தவிர்த்தார்கள் என்று அறியவந்தது. (அ-202-68)

## கல்விப் பணிப்பாளர்கள் திருமலைக்கு

குடாநாட்டில் பணிபுரியும் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களும் நேற்று திருகோண மலைக்குச் சென்றுள்ளனர்.

'யுனிசெவ்' அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள செயலமர்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே அவர்கள் திருமலைக்குச் சென்றுள்ளதாக கல்வித்திணைக் கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-160)

## கடற்படை முகாமினுள் நுழைய முயன்றவர் மீது சூடு

திருகோணமலை கடற்படை பாதுகாப்பு முன்னரங்க நிலையத்திற்குள் அத்துமீறி நுழைய முற்பட்டார் எனக் கூறப்படும் ஒருவர் கடற்படையினரால் சுடப்பட்டதில் காயத்திற்குள்ளாகியுள்ளார். திருகோணமலை வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார் - கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்துமீறி நுழைய முற்பட்டவரிடம் இருந்து மின்கம்பிகளை அறுக்கும் குரடு, ரீ - 81, ரி - 8 ரகத் துப்பாக்கி, ரவைக்கூடு, வயர் மற்றும் இலத்திரனியல் கருவிகள் போன்றவற்றைப் படையினர் மீட்டுள்ளனர் எனவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

தற்போது சூட்டுக்காயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட இவர் சிகிச்சையின் பின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

மு. சபாநாதன், ஜே.பீ.யூ.எம்.
சட்டத்தரணி, மல்லாகம்.

**அழைப்புக் கட்டளை**

இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

1. செல்வராசா கருணாகரன்,
2. பரராஜசிங்கம் கோகிலன், இருவரும் அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு,
3. இராசரத்தினம் சிவநேசன், நாவலர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

வழக்காளிகள்.

வழக்கு இல: நானாவிதம்/ 177

எதிர்

1. சுப்பிரமணியம் பரம்சோதி (தலைவர்) அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு.
2. முத்துலிங்கம் சங்கர், (உப தலைவர்) திருநெல்வேலி கிழக்கு,
3. இரத்தினம் அச்சுதபாகன் (செயலாளர்)
4. நவரத்தினம் ஜெயப்பிரகாஷ் (உப செயலாளர்) இருவரும், திருநெல்வேலி மேற்கு
5. ஜீவரத்தினம் ஜெயதீஸ் (பொருளாளர்) திருநெல்வேலி கிழக்கு,
6. அருந்தவநாதன் சசிகுமார், நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு.
7. சுப்பிரமணியம் விஜிந்தன், அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு,
8. இராசநாயகம் சிவநாதன், திருநெல்வேலி மேற்கு,
9. கருணகுமார்பகீரதன், நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு அனைவரும், திருநெல்வேலி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினர்கள்.
10. ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஷ், அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,

எதிராளிகள்.

மேலே குறிப்பிடப்பட்டு எதிராளிகளுக்கு,

மேலே குறிப்பிட்டுள்ள இந்த வழக்காளிகள் எதிராளிகளாகிய உங்களுக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதே னும் இருப்பின் 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் அல்லது அதற்கு முன்னர் நீதிமன் றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதி யன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும்பட்சத்தில் வழக்காளியானவர் மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிட்டால் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும், சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றை கூறும் விவரக்குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
து.சிறீமோகன், பதிவாளர், மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி அழைப்பு

### கந்தையா கோணாமலை



தாயின் மடியில் 05.11.1952 ஆண்டவன் அடியில் 15.02.2007

கடந்த 15.02.2007 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.05.2007) புதன்கிழமை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம். (60453)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மேவின் அன்ரன் மைக்கல்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மேவின் அன்ரன் மைக்கல் 13.05.2007 காலமானார்.

அன்னார் அமரர் பொன்னுத்துரை மற்றும் மொனிக்கா தம்பதியரின் அருமை மகனும் திரு.திருமதி டொன்பொஸ் கோவின் மருமகனும் பமிலா வேஜினியின் (சித்த மருத்துவர், கொழும்பு) அன்புக் கணவரும் மொறின், காலஞ்சென்ற மேவின், றொபின், ஸ்ரலின், மாலின், லலின் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுரேந்திரன் (கச்சேரி - ஆட்பதிவு திணைக்களம்), Dr.நரேந்திரன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.05.2007) நண்பகல் 12 மணி முதல் 66, மயூரா பிளேஸ் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (17.05.2007) வெள்ளவத்தை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பொரளை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அ. டொன்பொஸ்கோ.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org